


தொகுதி ௨
சித்திரம் 11
பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்
எதிரியின்
சவால்
www.ponnivala.com
© 2012 Ponnivala Publishing



தொகுதி 2
சித்திரம்-11

## வெற்றிக்கான ரகசியம்

கொடிய காட்டுப்பன்றியான கொம்பனின் சவாலை ஏற்று அதனுடன் போர் புரிய தங்கள் படைகளுடன் வீரமலைக்குத் தேடிச் சென்ற பொன்னிவளநாட்டின் சகோதரர்களில் இளைய வரான சங்கர் உடல் சுகவீனம் உற்றார். அப்பொழுது அங்கே சந்நியாசியை போல் வடிவம் கொண்டு வந்த விஷ்ணுவை அழைத்து இதற்கான காரணத்தை கேட்கின்றனர்.




மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ கசாண்ட்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்


ஒப்பச்சர்
முலர்விழி ராஜ்


வெளியீட்டாளர்
பொன்னிவளா பப்ளிகேசன்





© 2012
சாப்ட்சைன்ஸ் அசோசியேசன் லிமிடட்.



அந்த நாசகார கொம்பன் பொன்னிவளநாட்டின் வயல்களையும்பூந்தோட்டங்களையும், அழித்ததோடு மட்டுமல்லாமல் சவாலும் விட்டு சென்றுள்ளது.
இருக்கட்டும்! அவன் இருக்கும் வீரப்பூருக்கேச் சென்று அவனை அழிக்க வேண்டும். பொன்னிவளநாடடின் போர்முரசை கொட்டி விட்டேன். இனி ஒவ்வோர் வீட்டிலிருந்தும் ஒரு ஆண்மகன் போருக்கு தயாராகி வந்துவிடுவான்.
நம் நிலங்களை நாசம் செய்த கொம்பனை பழி தீர்க்க அனைவரும் நாளை காலையில் புறப்பட வேண்டும்.


பொழுது புலர்ந்ததும், அரண்மனையில் பொன்னரும், சங்கரும்
போருக்குப் புறப்பட்ட தயாராகி சாம்புகனை அழைத்தனர்.
சாம்புகா! வீரர்களை அழைத்துக் கொண்டு வீரமலைக்காட்டிற்கு சென்று அங்கே தங்குங்கள்.
சரி சாமி!
வவ் வவ்
சாம்புகன் வீரர்கள் அனைவரையும் அழைத்துச்
சென்று வீரப்பூர் காட்டில் கூடாரமிட்டு தங்கினான்.



அரண்மனையில் உறங்கிக் கொண்டிருந்த தங்காள் தனக்கு ஏற்பட்ட கனவினால் விழித்தெழுந்து அண்ணன்களைத் தேடிச் சென்றாள்.
ஆ... இல்லை!
அண்ணா! நான் ஒரு கனவு கண்டேன்.
வெளியே வாருங்கள்! அதைப்பற்றி கூறுகிறேன்.



முதலில் நீங்கள் இருவரும் பொன்னிவளநாட்டின் வீதிகளை நம் பல்லக்கில் சுற்றி வரும் அழகை நான் பார்க்க வேண்டும்.
இந்தப் போருக்குச் சென்றால், திரும்பி வர மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்.
தங்கையின் விருப்பம் போல் இருவரும் செய்தனர்.



இருவரும் பல்லக்கில் பொன்னிவளநாட்டிலுள்ள எல்லா இடங்களுக்கும் சென்றனர்.
அவர்களை கண்ட மக்கள் பணிவன்புடன் வணங்கி வாழ்த்தினர். ஆனால்
அவர்களுக்குத் தெரியாது இது தான் மன்னர்களை தாங்கள் இறுதியாக பார்ப்பதென்று.


நகர்வலம் முடித்து அரண்மனைக்குத் திரும்பியவர்களை எதிர் கொண்ட தங்காள்...
அண்ணா நீங்கள் இருவரும் போரில் இறந்துவிட்டால் எனக்கு யார் தெரியப்படுத்துவார்கள்?
சரி! உனக்கு வேண்டியதை கேள் தங்காள்!
அதனால் கேட்கும் சிலவற்றை கொடுத்துவிட்டுப் போங்கள் நான் தெரிந்து கொள்வேன்.
மாங்காய், மல்லிகைப்பூ, தேங்காய், எண்ணைவிளக்கு, தண்ணீர் நிரம்பிய பாத்திரம் மற்றும் சந்தனம் இவற்றை அடையாளங்களாக எனக்கு வைத்துவிட்டுப் போங்களண்ணா!
சகோதரர்கள் தங்காள் கேட்டதைக் கொடுத்தனர். அவற்றை அவள் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.



சகோதரர்கள் அறைக்குள் சென்று போருக்கான உடைகளை அணிந்து கொண்டனர்.



அடுத்து இருவரும் போரில் வெற்றி பெறுவதற்காக விஷ்ணுவை வணங்கினர். பின் பூநூலை எடுத்து அணிந்து கொண்டு வாளை இடையில் சொருகிக் கொண்டனர்.
மகாவிஷ்ணுவே! பெருமாளே! எங்களுக்கு வெற்றியைத் தந்தருள வேண்டும்!


தங்காள்! நாங்கள் புறப்படுகிறோம். விரைவிலேயே திரும்பி வந்துவிடுவோம். எங்களை ஆசீ கூறி அனுப்பி வை.
அண்ணா
நான் ஆசீர்வதித்தாலும் நீங்கள் திரும்பி வரப்போவதில்லை தானே!
அண்ணா! நீங்கள் திரும்பி வரவே மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்.
தங்கையே! எதற்காக இப்படி பேசுகிறாய்?
இல்லை! திரும்பி வரமாட்டீர்கள்! நீங்கள் திரும்பி வரவே மாட்டீர்கள்!


காஞ்சி நாதனே!
எங்களை
ஆசீர்வதியுங்கள்
சுவாமி!
விஷ்ணுவை வணங்கிவிட்டு இரு சகோதரர்கள் குதிரையில் ஏறி வீரமலைக்காட்டை நோக்கி வேகமாகச் சென்றனர்.


வாருங்கள் சாமிகளே!
விரைவில் சகோதரர்கள் சாம்புகனும் மற்ற வீரர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர். சாம்புகன் அவர்களின் குதிரைகளை ஓர் இடத்தில் கட்டினான்.
நாங்கள் நெடுந்தூரம் பயணம் செய்து வந்ததால் சிறிதுநேரம் ஓய்வெடுக்துக் கொள்கிறோம்!
கொர்ர்ர்ர்...


அரண்மனையில் கவலையுடன் இருந்தது பொன்னாச்சி.
பொன்னரும், சங்கரும், சாம்புகனும் அரண்மனையில் இருந்த அனைத்துப் பெரிய நாய்களையும் அழைத்துச் சென்றுவிட்டனர்.
ஆனால், நான் சிறியதாய் இருந்த காரணத்தால் என்னை ஒதுக்கி விட்டனர்.
என்னை உதாசீனப்படுத்திய அவர்களுக்கு நான் சரியான பாடம் கற்பிப்பேன்!
என்னை அழைக்காமல் சென்றதிற்காக நிச்சயம் வருந்துவார்கள்.


பொன்னாச்சி செல்லாத்தா கோவிலுக்குச் சென்று வருத்தத்துடன் முறையிட்டது.
செல்லாத்தா! பொன்னிவளநாட்டு மன்னர்கள் கொம்பனுடன் போரிட அரண்மனையில் இருந்த எல்லாப் பெரிய நாய்களையும் அழைத்துச் சென்றுள்ளனர்.
ஆனால், என்னை மட்டும் அழைக்காமல் இங்கேயே விட்டுச் சென்றுவிட்டனர்.
வீரமலைக்காட்டில் எதிரிகளுடன் போரிட கையில் கத்தியை எடுக்கும் பொழுது அவர்களுக்கு உடல் பலமின்றி போகட்டும். இந்த வரத்தை எனக்குத் தந்தருளுங்கள் தாயே!
அவர்களால் போரிட முடியாமல் போக வேண்டும்.



கோபத்தில் சபித்துவிட்டு பொன்னாச்சி ஒழிந்து கொள்ள இடம் தேடி ஓடியது.






நீண்டநேரத்திற்குப் பிறகு ஒரு இருட்டான இடத்துக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டது.




வ்ஷ்ஷ்ஷ்...
வ்ஷ்ஷ்ஷ்...
அந்த சிறிய நாயின் சாபம் பொன்னரும், சங்கரும் இருக்கும் இடத்தைச் சென்றடைந்தது.



சாபத்தால் இளையவரான சங்கருக்கு குளிருடன் கடும்காய்ச்சல் ஏற்பட்டது. இதனால் உடல் பலம் முழுவதையும் இழந்த அவரால் கத்தியைத் தூக்க முடியாமல் போனது.
ம்ம்ஹா...!
அண்ணா! நம் பொன்னிவளநாட்டிற்கு ஏதோ கேடு வரப் போகிறது.
தம்பி! உனக்கு கடும்காய்ச்சல் வந்துள்ள இந்நிலையில் நாம் எப்படி கொம்பனுடன் சண்டையிடுவது? .
நாம் அரண்மனைக்கே திரும்பிச் சென்று விடுவோம்.
இல்லை! நாம் இப்பொழுது திரும்பிச் சென்றால், கொம்பன் நம்மை தேடி வந்து கொன்று விடுவான்!
சாம்புகனை அனுப்பி கொம்பன் எங்கிருக்கிறான் என்று பார்த்து வரச்சொல்லுங்கள்.



சாம்புகன் கொம்பனைத் தேடி புறப்பட்டான்.
இந்த காட்டுப் பன்றியை இங்கே எங்கேயும் காணவில்லையே!
ம்..! சிறிது ஓய்வெடுத்துவிட்டு பொழுது சாய்ந்ததும் செல்வோம்.
அப்போது சாம்புகன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பாறைக்கு முன்பாக இருந்த குகையிலிருந்து வெளி வந்த கொம்பன் அவனைப் பார்த்ததும் கோபங் கொண்டது.
கொர்ர்ர்ர்...
கொர்ர்ர்ர்...
அடே! யாரடா நீ?

சாம்புகன் பதில் பேசாமல் திகைத்து நின்றதைப் பார்த்த கொம்பன் ஆத்திரங் கொண்டது.





அது சரி! உன் தோளில் மாட்டியிருக்கியே, அது என்ன?
அது ஒரு கொம்பு வாத்தியங்க.
நான் அதை ரொம்ப நல்லா ஊதுவேனுங்க. நீங்க கேட்டுப் பாக்கறீங்களா?
சரி... சரி வாசி! நான் சென்று ஓய்வெடுக்கிறேன்.
சாம்புகன் கொம்பை எடுத்து வாசிக்க தொடங்கினான். கொம்பனும் உறங்கிப் போனான்.
ராரீரா..ராரோ!
ஆ..ராரோ!


கொர்ர்ர்ர்...
கொம்பன் தூங்கியதும், சாம்புகன் தான் அவனைக் கண்டதிற்கு ஆதாரமாக அவன் உடலில் இருந்த ரோமங்கள் சிலவற்றை பிடுங்கிக் கொண்டு, பொன்னரும், சங்கரும் இருக்கும் இடத்திற்கு விரைந்து ஓடினான்.


சாமி! நான் கொம்பனைப் பார்த்தேன்!
அது சாதாரணமான காட்டு விலங்கு அல்ல. கடவுளின் வரத்தால் பிறந்தவன்.
ஏதேனும் ஆதாரம் கொண்டு வந்திருக்கிறாயா?
சாமி! இது கொம்பனின் ரோமங்கள்!
ஆ! என்ன இவ்வளவு பெரியதாக இருக்கிறது?
சாம்புகன் தீயை மூட்டி தான் கொண்டு வந்த ரோமங்களை அதில் போட்டான். அப்போது எழுந்த துர்நாற்றம் காற்றில் மிதந்து கொம்பனின் நாசியை தாக்கியது.
ஹுர்ர்ர்
ஹுர்ர்ர்


சாமி! நாம் கொம்பனை கொல்லாமல் விட்டு வைப்பது ஆபத்து. நான் நம் படைகளைக் கூட்டிச் சென்று அதை கொன்றுவிட்டு வருகிறேன்.
அது எளிதான காரியமன்று. சண்டையிட சென்றால், நம் படை திரும்பி வரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை!
சாமி! நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் சென்று வருகிறோம்.
சாம்புகா! நீ பலசாலி! எப்படியாவது தப்பிவிடுவாய். ஆனால் பாவம் நம்மை நம்பி வந்த படைவீரர்களின் நிலைமை என்னாகும் என்று நினைத்துப் பார்!
கவலைப்பட வேண்டாம்! எல்லாம் நல்லதாக நடக்கும். என்னை நம்புங்கள்.
சாம்புகன் படைகளை அழைத்துக் கொண்டு கொம்பனைக் கொல்ல புறப்பட்டுச் சென்றான்.

அனைவரும் கொம்பன் இருக்கும் இடத்தை அடைந்ததும் சாம்புகன் அவனுக்கு இடதுப்புறமாக நின்ற நாய்களைக் பார்த்து கொம்பனைத் தாக்கும் படி உத்தரவிட்டான்.









நாய்கள் கொம்பனின் ரோமங்களை கடித்து இழுத்தன. இதனால் கொம்பன் புரண்டு படுக்கும் பொழுது அதன் அடியில் மாட்டிக் கொண்ட நாய்கள் அனைத்தும் நசுங்கின.




சாம்புகன் மீண்டும் வலப்புறமாக நின்ற நாய்களுக்கு கொம்பனைத் தாக்கும்படி உத்தரவிட்டான்.
ஆ...!
ம்ம்ம்... தாக்குங்கள் கொம்பனை!
வவ்...வவ்...
வவ்...வவ்...
நாய்கள் பாய்ந்து சென்று அவன் கழுத்தைக் கடித்தன. இம்முறையும் கொம்பன் புரண்டு படுத்து அவைகளைக் கொன்றான்.


ஐயோ! நம்மோட எல்லா நாய்களுமே செத்துப் போயிடுச்சே! நாம இங்க ஒருநிமிசம் கூட நிற்கக்கூடாது. ஓடுங்க! ஓடுங்க! திரும்பிப் பார்க்காம ஓடுங்க!
அனைவரும் அங்கிருந்து ஓடினார்கள். ஆனால் கொம்பன் அவர்களை விடவில்லை.
ஹர்ர்ர்
கொம்பன் துரத்திச் சென்று அனைவரையும் தன் காலால் மிதித்து காற்றில் தூக்கி வீசினான்.
ஓ...ஆ!
உம்....! ஓ...!


ஐயோ!
ஆ..!
அம்மாாா...!
ஹர்ர்ர்
ஹர்ர்ர்
கொம்பன் அனைவரையும் கொன்று விட்டு, குகைக்குள் சென்று ஓய்வெடுத்துக் கொண்டான்.
ஹர்ர்ர்
ஹர்ர்ர்



சாம்புகன் மட்டும் அங்கிருந்து தப்பி ஓடினான்...
சாமி! நான் தோற்றுவிட்டேன். அந்தக் காட்டுப்பன்றி நம் படைவீரர்களையும், நாய்களையும் அழித்துவிட்டது.
அடப்பாவி! உன்னிடம் முன்பே சொன்னேனே! இப்பொழுது அனைவரையும் அநியாயமாக பலி கொடுத்து விட்டாயே!
இனிமேல் நம்மால் வீட்டிற்கு எப்படிச் செல்ல முடியும்?
அதைவிட தற்கொலை செய்து கொள்வது எவ்வளவே மேல்!


வ்விஷ்ஷ்ஷ்
விஷ்ணு சகோதரர்களின் அழுகுரல் கேட்டு பூமிக்கு விரைந்து வந்து ஒரு துறவி போல் தன் உருவத்தை மாற்றிக் கொண்டார்.
சம்போ மகாதேவா!
சம்போ மகாதேவா!


யாரோ பேசும் சத்தம் கேட்கிறது.
சாம்புகா! யார் என்று பார்த்து, அழைத்து வா!
சம்போ மகாதேவா!
ஐயா! தயவு செய்து என்னுடன் வாருங்கள்.
வாருங்கள்! வாருங்கள்! உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்.


என்னிடம் என்ன கேட்க வேண்டும்?
சாமி! உங்களுக்கு ஜோசியம் பார்க்கத் தெரியுமா?
இல்லை! எனக்கு தெரியாது.
தயவு செய்து தாங்கள் தான் எங்களுக்கு உதவவேண்டும். எங்களுடைய வீரர்கள் அநியாயமாக ஒரு கொடியபன்றியால் கொல்லப்பட்டு விட்டனர். அதனை அழிப்பதற்கான வழியை கண்டறிந்து கூற வேண்டும்.
சரி! நான் உங்களுக்காக பார்த்து கூறுகிறேன். இந்த நூலை ஓலைச்சுவடிக்குள் நுளைத்து எடுங்கள்.
சங்கர் மூன்றுமுறை ஓலைச்சுவடிக்குள் நூலை நுளைத்து எடுத்த பின், அந்தத் துறவி அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார்.


உங்கள் தாய் சிவனிடம் வரம் வாங்கிய போது, உங்கள் அரண்மனை நாய்க்கும் சேர்த்து வரம் வாங்கினாள். அந்த வரத்தால் பிறந்தது தான் பொன்னாச்சி. அந்த சிறிய நாய்க்கு பல்லில் கடுமையான விஷம் உள்ளது.
பொன்னாச்சியை நீங்கள் போருக்கு அழைக்காமல் வந்ததால், அவள் கவலையுடன் செல்லாத்தாகோவிலுக்குச் சென்று உங்களுக்கு சாபமிட்டுள்ளாள்.
அதனால் தான், உங்களுக்கு கடும்காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அந்தச் சாபம் தீரவேண்டும் என்றால், உடனடியாகச் சென்று பொன்னாச்சியைப் பாருங்கள்.


பொன்னாச்சி உங்களுடன் இணைந்தால் தான் அந்த கொடியபன்றியை உங்களால் அழிக்க முடியும்.
நன்றி! நாங்கள் இப்பொழுதே சென்று பொன்னாச்சியை அழைத்து வருகிறோம்.
விஷ்ணு சொர்க்கத்திற்கு புறப்பட்டார்.
இருசகோதரர்களின் ஆயுளும் முடிவடையப் போகிறது. இந்நிலையில் கொம்பனை எப்படிக் கொல்லப் போகிறார்கள்? பொன்னாச்சி இல்லாமல், அவனை அழிப்பது சாத்தியமில்லை. இருவருக்கும் பொன்னாச்சியின் உதவி கிடைக்குமா? அனைவரும் இணைந்தே கொம்பனைக் கொல்வார்களா?
உர்ர்ர்

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic24tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!








01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியின் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது


## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com

ISBN 978-1-927093-65-8

© 2012 Ponnivala Publishing